நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

16 APR 2000
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 04 ஞாயிற்றுக்கிழமை ( 16 - 04 - 2000 ) VALAMPURI ஒலி: 119

## ★ மூன்றரை ஆண்டுகளின் பின்
# இத்தாலியப் படகு விபத்து
# குறித்து ஆராய்வதற்கு குழு!

### யோகராஜன் எம்.பி. ஏற்பாட்டில் நியமனம்

(கொழும்பு)

கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கு முன்பு இத்தாலி மோல்டா கால்வாயில் இடம்பெற்ற பயங்கரப் படகு விபத்தில் கொல்லப்பட்ட இலங்கையரின் நலன்களை கவனிக்க தற்காலிக குழுவொன்று நேற்று கொழும்பில் நியமிக்கப்பட்டது.

படகு விபத்தில் கொல்லப்பட்ட இலங்கையரில் வடக்கு யாழ்ப்பாணத்தையும், கிழக்கையும் சேர்ந்தவர்கள் கணிசமான தொகையினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாலி மோல்டா கால்வாயில் 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி மூழ்கிய படகில் கொல்லப்பட்ட இலங்கையரின் பெற்றோர்கள் உறவினர்கள் இணைந்து நடவடிக்கை எடுப்பதற்கு குழு ஒன்றை கொழும்பில் அமைத்துள்ளார்கள்.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கு மண்டபத்தில் கொழும்பு மாவட்ட எம்.பி. ஆர். யோகராஜனின் ஏற்பாட்டில் நேற்று நடந்த கூட்டத்திலேயே இக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இப் படகு விபத்தில் காணா

(8ஆம் பக்கம் பார்க்க)

### பாதிக்கப்பட்டவர் சமூகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மொழி மூல அரசாங்க பாடசாலைகளுக்கான சங்கீத, நடன, சித்திர ஆசிரியர்களுக்கான ஆட்சேர்ப்புக்கு 1998 ஆம் ஆண்டு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படாதோரும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுச் செயன் முறைப் பரீட்சைக்கு அழைக்காதோருக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10-30

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு 2000ரூபா அடுத்த வாரம் வழங்கல்

பளை மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளிலிருந்து யுத்த அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்து வந்த ஆயிரத்து 600 குடும்பங்களுக்கும் மேலும் வர இருக்கும் குடும்பங்களுக்கும் 2 ஆயிரம் ரூபா உடனடி நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிவாரணப் பணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கிகள் ஊடாக வழங்கப்படவுள்ளதாக அரச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இப்பணம் சம்பந்தப்பட்ட பிரதான குடியிருப்பாளருக்கு காசோலை மூலம் வங்கியூடாக அடுத்தவாரம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

[8 ஆம் பக்கம் பார்க்க]

### லங்காமுடித்தகப்பலில்பயணம்செய்ய
## விமான கப்பல் ரிக்கற்றுக்கள் பெற்றவர்கள் இன்று காலை வரவும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறையிலிருந்து திருகோணமலைக்கு லங்கா முடித்த கப்பல் சேவை மீண்டும் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே ரிக்கற்றுக்களை பெற்றவர்களும், விமான ரிக்கெற்றுகள் உடையவர்களும் இன்று காலை 8-30 மணிக்கு பயண ஆயத்தங்களுடன் யாழ். சிங்கள மகா

(8ஆம் பக்கம் பார்க்க)

### நான்கு சடலங்கள் ஒப்படைப்பு

[யாழ்ப்பாணம்]

சிதைவடைந்த நிலையில் நான்கு இனந்தெரியாதவர்களின் சடலங்கள் கடற்படையினரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

பிரேத பரிசோதனையின் பொருட்டும் மரண விசாரணையின் பொருட்டும் இச் சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

[க-12]

### குண்டுவெடிப்பில் உயிரிழந்தோர்
## மரண செலவுக்கு இரண்டாயிரம் இழப்பீட்டுத்தொகை 10ஆயிரம் வழங்கவும்
### அஷ்ரப் பணிப்பு

(மட்டக்களப்பு)

திருமலை மக்கேஸியர் ஸ்ரேடியத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் உயிரிழந்த ஒன்பது பேரின் மரணச் சடங்கிற்குத் தலா இரண்டாயிரம் ரூபா வழங்குவதற்கு புனர்வாழ்வு புனரமைப்பு துறைமுக அபிவிருத்தி அமைச்சர் எம். எச். எம். அஸ்ரப் பணிப்புரை விடுத்

(8ஆம் பக்கம் பார்க்க)

### மனிதநேய அமைப்புகளின் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பளைப் பிரதேச செயலர் பிரிவில் யுத்தம் நடைபெறும் பகுதிகளில் சிக்கியுள்ள மக்களை வெளியேற அனுமதிக்கும் படி பலவகைப் போராட்டங்களையும் நடத்திய மனித நேய அமைப்புக்கள் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து இன்று ஆராயவுள்ளன.

அரச சார்பற்ற நிறுவனங்

( 8ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கை அதிபர் சேவை
## தரம் 1 இற்கான நேர்முகப்பரீட்சை நாளை திட்டமிட்டபடி நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அதிபர்சேவை தரம் 1க்கு பதவி உயர்வு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன:

இலங்கை அதிபர் சேவையில் 1989 ஆம் ஆண்டு தரம் 2 இல் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தரம் 1 க்கு பதவி

(8 ஆம்பக்கம் பார்க்க)

## மேல்மாகாண சபை அமைச்சர் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதி

[நீர்கொழும்பு]

மேல் மாகாண சபையின் கடற்றொழில் அமைச்சர் விரந்த பெர்னாந்து நீர்கொழும்பில் உள்ள அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு

(8 ஆம் பக்கம் பார்க்க)

### புறக்கோட்டையில் சம்பவம்
## ஆட்டோ கொள்கலன் மோதி ஒருவர் பலி ஒருவர் காயம்

(கொழும்பு)

புறக்கோட்டை மத்திய வீதியில் ஐந்துலாம்படிச் சந்திக் கருகாமையில் கனரக கொள்கலன் ஒன்றுடன் ஆட்டோ மோதியதில் ஒருவர் கொல்லப்பட்டும் ஒருவர் காயமடைந்தும் உள்ளனர்.

நேற்று பிற்பகல் ஒருமணியளவில் புறக்கோட்டை மத்திய வீதிக்கும் ஐந்துலாம்படி சந்திக்குமிடையே அவ் வீதியால் வந்து கொண்டிருந்த ஆட்டோவுடன் மோதி தடம்புரண்டது என்று தெரிய வருகிறது.

[வ]

### இரு தினங்கள் மட்டும்
## 700 பேர் கொழும்பு ஆஸ்பத்திரியில் வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

மது அருந்தி களிப்புடன் புத்தாண்டை கொண்டாடி சுமார் 700 பேர் கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த இரு தினங்கள் மட்டும் இவ்வளவு பெரும் தொகையானோர் ஆஸ்பத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவுமாறு சம்பந்தன் கோரிக்கை

[திருமலை]

வடமராட்சி கிழக்கில் இடம் பெற்ற மோதல்களை அடுத்துநாகர் கோவில்தெற்கு நாகர்கோவில் வடக்கு போன்ற கரையோரப் பகுதிகளில் இருந்துஇடம்பெயர்ந்து பருத்தித்துறையில் அகதி வாழ்க்கையை மேற்கொள்பவர்கள் படும் இன்னல்கள் சொல்லில் அடங்காது. அவர்களின் [உணவு, அடிப்படை வசதிகள் இன்றி அவதியுறுகின்றனர்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளரும், திருமலை மாவட்ட

[ 8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

தேவை

வெட்டித் தைக்கக் கூடிய, தைக்கக் கூடிய, கைவேலை செய்யக் கூடிய பெண்பிள்ளைகள் தேவை. தொடர்பு பானு காமென்ஸ் 11, பிறவுண் வீதி, நாவலர் வீதிக்கு அண்மையில் யாழ்ப்பாணம்.

(306)

## இன்று இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் அருள்மிகு ஸ்ரீசந்திரசேகர விநாயகர் ஆலய இரதோற்சவம் நாளை திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் நெட்டிலிப்பாய் அருள்மிகு பிள்ளையார் ஆலய இரதோற்சவம் இன்று திங்கட்கிழமையும், தீர்த்தோற்சவம் செவ்வாய்க்கிழமையும் நடைபெறவுள்ளது. (செ)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி சமேதஸ்ரீவீரபத்திர சுவாமி ஆலய இரதோற்சவம் நாளை திங்கட்கிழமையும், செவ்வாக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (செ)

★ ★ ★

அரியாலை)

தாவடி அருள்மிகு ஸ்ரீவடபத்திரகாளி அம்மன் ஆலய இரதோற்சவம் நாளை திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

(செ-106)

★ ★ ★

(அரியாலை)

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீஅம்பலவான வீரகத்தி விநாயகர் ஆலய இரதோற்சவம் நாளை திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

(செ-106)

★ ★ ★

(ஊர்காவற்றுறை)

காரைநகர் கருங்காலி போசுட்டி முருகமூர்த்தி கோயில் வருடாந்த தேர்உற்சவம் நாளை திங்கட்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறவுள்ளது.

மறுநாள் சித்திரா பௌர்ணமிதினத்தன்று சமுத்திர தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது. (75)

# பேனாவின் சக்தியை அச்சுறுத்தி அடக்க முனைவது மடமைத்தனம்

## மட்டக்களப்பு எம்.பி. ஜோசப் பரராசசிங்கம்

(மட்டக்களப்பு)

பேனாமுனை வாளைவிடக் கூர்மையானது அதன் சக்தியை அச்சுறுத்தல்களின் மூலம் அடக்க முனைந்தால் அதைவிட மடைமைத்தனம் எதுவுமே இருக்க முடியாது. சமூகச் சீர்கேடுகளையும். அவலங்களையும் ஒரு பத்திரிகையாளனால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பாராஜசிங்கம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில்நடைபெற்றபத்திரிகையாளர்களின் ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்—

பத்திரிகையாளர்கள் மிரட்டலுக்கும், கொலைப்பயமுறுத்தலுக்கும் அஞ்சாதவர்கள் ஒரு பத்திரிகையாளன் பயந்துபோய் தனது பேனாவை மூடிவைத்தால் முழுத்தேசமுமே அவமாத்தால் தலைகுனிந்து கொள்ளும்.

பத்திரிகையாளனின் பேனா திறக்கப்பட்ட தன் பின்னர்தான் இந்தத் தேசம் எழுச்சிபெற ஆரம்பித்தது எத்தனைதான் மிரட்டல் வந்தாலும் உண்மையான செய்தியாளன் சற்றும் தளரமாட்டான் என மேலும் அவர் தெரிவித்தார்.

(உ)

# சடலங்களில் இருந்து வரும் துர்நாற்றம் ஊழியர்கள் மத்தியில்விசனம்

## யாழ் . ஆஸ்பத்திரியில் சம்பவம்

யாழ். போதனாவைத்தியசாலையில் ஆய்வு கூடமும் பிரதேச அறையும் ஒரே கட்டடத் தொகுதியில் இருப்பதால் ஆய்வு கூட ஊழியர் பலத்த சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

சடலங்களில் இருந்துவரும் துர் நாற்றம் நிம்மதியாக வேலை செய்ய முடியாதுள்ளதாக வைத்தியசாலை ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இதன் அருகிலேயே (பிரேத அறையின்) சமயலறையும் காணப்படுவதால் சுகாதாரக் கேடும் நிலவுதாகவும் காற்றினூடு பரவும் இக்கிருமிகளால் நோயாளர் பாதிக்கப்படக் கூடிய அபாயம் நிலவுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

(க-12)

## யாழ். மாவட்டத்தில்

# 300 பேருக்கு வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்

[கொழும்பு]

யாழ். மாவட்டத்தில் 300 பேருக்கு வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட இருக்கிறது.

வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்கென இவ்வாண்டு விண்ணப்பித்த 512 பேரில் மோட்டார் சைக்கிள் ஒடுதற்கு விண்ணப்பித்த 300 பேருக்கு வாகன அனுமதிப் பத்திரம் வழங்க யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் சிபார்சு செய்துள்ளது.

இவர்களுக்காக திணைக்கள அதிகாரிகளினால் யாழ். செயலகத்தில் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கே இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திற்கென ஒரு பரிசோதகரும் நியமிக்கப்பட்டுள்ளதால் வாகன ஓட்டுநர் பத்திரம் வழங்கும் நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(க-உ)

# சுவிஷ் நாட்டின் உதவியுடன் இலங்கையில் பெற்றோலிய ஆய்வு

[கொழும்பு]

கடலுக்கடியில் இருக்கும் எண்ணெய்வளம் தொடர்பான ஆரய்ச்சிகளை மேற்கொள்ளும் தீர்மானம் ஒன்றினை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பான ஆராய்ச்சிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் இனிமேல் மேற்கொள்ளும் பணிகளுக்கென ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து நிதியுதவிகள் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

செய்மதித் தொழினுட்பத்தைப் பிரயோகித்து 3லட்சம் சதுரக் கிலோ மீற்றர் விஸ்தீரணமான பிரதேசத்தை மதிப்பீடு செய்யும் இந்தநடவடிக்கையினைத் துரிதப்படுத்தவென சட்டத்திலும் திருத்தம் கொண்டுவரப்படும். என பெற்றோலியக் கூட்டுத்தான அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய மூலவளங்களைப் பகிர்ந்துகொள்வது தொடர்பான ஒப்பந்தங்கள் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு நடாத்தப்படும்.

மதிப்பீடு ஆராய்ச்சிகள் வெற்றிகெண்டால் மூலவளம் பகிர்ந்து கொள்வது சம்பந்தமான புதிய ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

மதிப்பீடுகளை மேற்கொள்ளவென சுவிஸ் நாடு முன்வந்துள்ளது.

மேற்படி ஆராய்ச்சிகள் செப்ரெம்பர் மாதமளவில் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

புத்தளம், மன்னார் யாழ்ப்பாணப்பகுதிகளைர்ஷ்ய நிபுணர் ஆய்வு செய்வதும்இங்கு குறிப்பிடத்தக்கது. [உ]

## வில்லூன்றி புனித தீர்த்தம் சித்திரா பூரணைப் பெருவிழா

18-04-2000 செவ்வாய்க்கிழமை

தீர்த்தோற்சவம்

காலை 6.45 மணி வசந்த மண்டபப் பூசை
காலை 8.06 மணி தீர்த்த வாரி
காலை 9 மணி முதல் 10 மணி வரை தீர்த்தக் கட்டத்தில் அனுக்கிரகம்
காலை 10 மணி சுவாமி கோயிலுக்கு எழுந்தருளல்.

பிதிர்க் கடன்கள்

காலை 8-15மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும்பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தர்மபரிபாலனசபை, வில்லூன்றி தேவஸ்தானம் பரிபாலனசபை, வில்லூன்றி புனித தீர்த்தம்

வில்லூன்றி,
15-04-2000

(கி/305)

## திருத்தப்படாத வீதி

நீண்டகாலமாகத் திருத்தப்படாது குன்றும் குழியுமாக பாவனைக்கு உதவாதுஇருந்து வரும் ஈச்சமோட்டை மற்றும் குருசோர் வீதியினால் அப்பகுதியில் பயணம் செய்வோர் பெரும் சிரமங்கள் எதிர் நோக்க வேண்டியிருக்கிறது.

உரிய அறிவித்தல்களை சம்பந்தப் பட்டோருக்கு வழங்கிய போதும் இதுபற்றி அவர்கள் பாராமுகமாக இருந்து வருவதால் மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர்.

அண்மையில் வீதியின் பள்ளங்களிற்கு கற்கள் ஓடுகள் கொண்டு சிலபகுதி நிரவப்பட்டுள்ளதாலும் அது சீரற்றுக் காணப்படுவதாலும் பாதசாரிகள் இன்னும் பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியிருக்கின்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க-59)

## தேசிய அடையாள அட்டைக்கு

# விண்ணப்பிப்போர் போலியான பிறப்புச் சான்றிதழ் சமர்ப்பிப்பு

(மானிப்பாய்)

தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரிகள் பலர் போலியான பிறப்புச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்து அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்து வருவது தெரிய வந்துள்ளது.

இது சம்பந்தமாக கைக்கொள்ளவேண்டிய நடைமுறைகள் பற்றிய சுற்று நிருபமொன்றினை ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் கே.ஜே.வி. ரணசிங்க சகல பாடசாலை அதிபர்களுக்கும் பிரதேச செயலர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

அச் சுற்று நிருபத்தில் இதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

ஆட்களைப் பதிவு செய்தல் தொடர்பான விண்ணப்பப் படிவம் ஒன்றை இத் திணைக்களத்துக்கு அனுப்பும் போது பிறப்புச் சான்றிதழ் அல்லது உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்றை கட்டாயம் அனுப்ப வேண்டுமென இதுவரை அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

ஆனாலும் அதிபர்களுக்கு பாடசாலையில் உள்ள பிறப்புச் சான்றிதழைப் பயன்படுத்தி பிறப்புச் சான்றிதளோ அல்லது உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழ் பிரதியோ இல்லாமல் விண்ணப்பப் படிவத்திற்குரிய விபரங்களை உறுதிப்படுத்தி விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஆட்களைப் பதிவு செய்யும் போதும் அல்லது பதிவு செய்யப்பட்ட நபர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் போதும் போலியான பிறப்புச்சான்றிதழை பயன்படுத்தி அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்வதற்கு முயற்சி செய்துள்ளார்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இந் நிலைமையை தடுப்பதற்காக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. ஆகையால் இதற்குப் பின் ஆபதி/01 விண்ணப்பப் படிவத்தைஇத் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கும் போது பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதியை அல்லது கிராம சேவை உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்றை இணைத்து அனுப்பவும்.

அதிபர்கள் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்கும் போது பாடசாலையிலுள்ள குறித்த விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிறப்புச் சான்றிதழின் பிரதி ஒன்றை கட்டாயமாக அனுப்புதல் வேண்டும்.

இதற்கு மேலதிகமாக 17 வயதுக்கு மேற்பட்ட வயதையுடைய விண்ணப்பதாரர்களுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது தாமதத்துக்கான காரணம் பற்றிய அறிக்கை ஒன்றையும் அனுப்புதல் வேண்டும். வயது 20 அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது அது பற்றிய ஒரு விசாரணை நடாத்தி தாமதத்துக்கான காரணத்தை கேட்டறிந்து அது பற்றிய அறிக்கை ஒன்றுடன் விண்ணப்பப்படிவத்தை அனுப்பவும்.

(க-120)

## போர் நடவடிக்கையில்

# இடம் பெயர்ந்த மக்களுக்கு பல்கலை மாணவர்கள் அன்பளிப்பு

(புலோலி)

வடமராட்சிக் கிழக்கிலிருந்துவன்செயல்களினால்இடம்பெயர்ந்து அம்பன், மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் தஞ்சமடைந்துள்ள சுர்மா 240குடும்பத்தினருக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பாவனைப் பொருட்களை வழங்கினர்.

இப் பொருட்களில் புடவைகள், நுளம்புத்திரிகள், தீப்பெட்டி, மெழுகுதிரிகள் உட்பட. இன்னும் பொருட்கள் அடங்கியிருந்தன.

இப் பகுதியில் உள்ள சிறுவர்களுக்கு 'அசெம்பிளி ஒவ் கோட்' பாலமா வகைகளையும் வழங்கியுள்ளது. மேலும் வடமராடசி கிழக்கு பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள் அகதிகளுக்கு சுமார் 1 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை வழங்க கியூடெக் நிறுவனம் முன்வந்துள்ளதாக வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் திரு.வி.பி.வேலாயுதபிள்ளை தெரிவித்தார்.

பருத்தித்துறையில் தஞ்சமடைந்துள்ளவர்களுக்கு புலோலி ப.நோ.கூ சங்கம், புலோலி வடக்கு இளைஞர் கழகம் உட்பட இன்னும் பல நிறுவனங்கள் உணவுவகைகளையும் வழங்கின. (க-52)

# சுழிபுரம் ஐக்கியசங்க வித்தியாலயத்திற்கு ரூபா 2 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு

## பிரதேச சபை தலைவர் தெரிவிப்பு

சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலய திருத்த வேலைகளுக்கென பிரமான அடிப்படையிலான நிதியிலிருந்து ரூபா இரண்டு இலட்சத்து 50,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் இந்நிதியை ஒதுக்கியுள்ளார்.

இதேவேளை பிரமாண அடிப்படையிலான நிதியிலிருந்து

★ சுழிபுரம் பாணாவெட்டி முதலாம் ஒழுங்கை திருத்த ரூபா 250,000

★ சுழிபுரம் சத்தியக்காடு மீன் சந்தை அமைக்க ரூபா 160.000

★ சங்கானை அரசினர் வைத்தியசாலை பகுதியில் உள்ள குன்று, குழிகளை செப்பனிட ரூபா 40,000

நூல் நிலையங்களுக்குத் தேவையான புத்தகங்கள் கொள்வனவு செய்ய ரூபா 150,000 ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ந)

# தமிழ் மொழிக்கும் இந்து மதத்திற்கு உரிய கௌரவம் கொடுபட வேண்டும்

## இந்திய தூதுவருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசு சிங்கள மொழிக்கும், பௌத்த மதத்திற்கும் முக்கியத்துவம் வழங்குவது போல தமிழ்மொழிக்கும், இந்து மதத்திற்கும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை யாழ். அரசாங்க அதிபர் ஊடாக இந்திய தூதுவருக்கு அனுப்பிய மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கை மக்களது மொழி கலாசார ரீதியான சமத்துவ நிலையை உருவாக்கி சமாதான முயற்சிகள் மூலம் நிரந்தர சமாதானமும், மனித நேசமும் நிலவ உடன் உதவுக.

இலங்கையில் பாதிப்புற்றுள்ள மனித நேசம் மீளவும் சமாதான நிலையில் நிலைபெறவும், பாதிப்புற்ற இந்து சமயிகளதும் தமிழ் மக்களதும் கலாசார வளர்ச்சிக்கும், தொழில் துறை விருத்திக்கும் மீள் புனரமைப்புக்கும் தாங்களும், தங்கள் நாட்டு அரசும், பிரதிநிதிகளும் வடகிழக்கு மாகாணத்திற்கு சிறப்பு நிலை வருகைகளைத் தொடர்ந்து மேற் கொள்வதுடன் மக்கள் இடர்கள் விலகி நிரந்தர சமாதானம் இலங்கையில் உருவாக வேண்டும். இதற்கு உதவுக.

பொருளாதார நிலையில் பாரிய இடப்பெயர்வினால் பசுவிப் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது வடகிழக்கு மாகாணத்தின் பசுவின விருத்திக்கும், பொருளாதார விருத்திக்கும், கோயில் வழிபாடுகள், பூசைகள் சிறப்புற அமைய சர்வதேசஇந்து சமய நிறுவனங்கள் மூலம் திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம் மீள் புனரமைப்புக்கு உதவிகளைப் பெற்றுத்தருக.

கிராமரீதியாக பரந்துள்ள கோயில்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும், இந்து இளைஞர் பேரவையினது கலாசார வளர்ச்சிக்கும் உரிய ஆன்மீக உதவிகளையும், உபகரணங்களையும், நூல்களையும் வழங்கி உதவுதல் மூலம் இலங்கை மக்களதுநிரந்தர சமாதானம் நிலைபெற இயன்றவரை துணை புரிக.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

கிழக்கு கடற்பகுதியில்

# வெளிநாட்டு கப்பல்களின் அத்துமீறல் நடவடிக்கைக்கு ஜனாதிபதி உத்தரவு

கிழக்கு மகாண கடற்பரப்பில் வெளிநாட்டுக் கப்பல்களின் அத்துமிறல் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா உரிய அதிகாரிகளிற்கு பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு ஜனாதிபதியை அண்மையில் சந்தித்து இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தியது.

அப்பேச்சு வார்த்தையில் கிழக்கு மாகண கடற்பரப்பில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கடற்படை அதிகாரிகளிற்கும், கடற்படை அமைச்சர்களிற்கும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (சு-60)

# சைவசமய விவகாரக் குழுவின் பண்ணிசைப் போட்டிகள்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் நடத்தப்படும் பண்ணிசைப் போட்டிகள் பிரிவு வாரியாக பின்வரும் திகதிகளில் காலை 9 30 மணிக்கு ஆண்களுக்கு தனியாகவும் பெண்களுக்குத் தனியாகவும் நடைபெறவுள்ளதாக குழுத் தலைவர் டாக்டர் சி. தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சிப் பிரிவில்இந்து மகளிர் கல்லூரியில் இம் மாதம் 15 ஆம் திகதியும், தென்மராட்சி பிரிவில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் 16 ஆம் திகதியும் வலிகாமம் பிரிவில் இராமநாதன் கல்லூரியில் 18 ஆம் திகதியும் யாழ்ப்பாணப் பிரிவில் யாழ் இந்துக் கல்லூரியில் 21 ஆம் திகதியும் இறுதிப் போட்டி யாழ். இந்துக் கல்லூரியில் 23 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் 29 ஆம் திகதி நாவலர் கலாச்சார மண்டபத்தில் நடைபெறும். (வ-ச)

# செய்தித் துளிகள்

### கங்கை தீர்த்த உற்சவம்

(ஊர்காவற்துறை)

தம்பாட்டி ஸ்ரீ முத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் 10ம் நாள் உற்சவமான கங்கைத்தீர்த் உற்சவம் எதிர்வரும் நாளை மறுதினம் அன்று செவ்வாய் கிழமை காலை 10 மணிக்கு தம்பாட்டி கடற்கரையில் இடம் பெறவுள்ளது. (க-75)

### அலங்கார உற்சவம்

[யாழ்ப்பாணம்]

கச்சாய் தெற்கு அருள்மிகு ஸ்ரீ பாதாளவைரவர் ஆலய வருடாந்தஅலங்காரஉற்சவம் கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமாகியது.

பந்துதினங்கள் நடைபெறும் இவ்உற்சவத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து இறுதிநாள் 108 சங்காபிஷேகமும், விசேட பூசையும் இடம்பெறஉள்ளது. (சு)

### கூட்டுக் கடற்படைப் பயிற்சியில் இந்தியா

அரபிக் கடல் முதல்தென் சீனக் கடல் வரை இந்திய, ஜப்பான் வியட்நாமிய கடற்படையினர் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டிருப்பதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ்பெர்னாண்டஸ்தெரிவித்தார்.

கல்கத்தாவில் புதிய நவீனரக யுத்தக் கப்பலின்வெள்ளோட்ட நிகழ்ச்சியின் போது அவர் இதனை தெரிவித்தார்.

அண்மையில் இந்தியாசீனா ஜப்பான் வியட்நாம் உறவுகள் இறுக்கமாக வருவதும் இந்த பயிற்சிகளுக்கு எடுத்துக் காட்டாக அமையும் என்று சொல்லப்படுகிறது. (க-2)

### கிராம உலா

(கோப்பாய்)

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த கிராம உலா இன்று ஞாயிற்றுக்கிழமை திருக்குளிர்த்தி வைபவம் நாளை திங்கட் கிழமையும் நடைபெறவுள்ளது. (செ-79)

### வீதி திருத்தம்

(அளவெட்டி)

தம்மளைச் சிவன் வீதி திருத்தவேலைகள் அண்மையில் மேற்கொள்ளப்பட்டன.

இதனையடுத்து வீதியோரத்தில் நின்ற பற்றைகள், செடிகள் வெட்டப்பட்டு வீதி துப்பரவாக்கப்பட்டது. (உ)

### ஸ்கந்தாவின் பெறுபேறு

சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியின் க. பொ. த சாதாரணப் பெறுபேறுகள் பின்வருமாறு;

சி. சுபாசினி 9டி, சி. செ. சசிகலா, 8டி2சிப.ராதா கிருஷணசர்ம 8டி, 2சி, மு. சுதர்சினி 7டி, 3சி, தெ. விதுரன் 5டி, 5சி

மேற்படி கல்லூரியில் 74 பேர் க. பொ. த. உயர்தரம் கற்பதற்கு தகுதியைப் பெற்றுள்ளனர். (சு)

### லச்க்ஷார்ச்சனை

[ஆவரங்கால்]

கோண்டாவில் கிழக்கு ஆசிமட அரசடி விநாயகர் ஆலய லக்ஷார்ச்சனை நிகழ்வு இன்று 16ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 25ஆம் திகதி பூர்த்தி அடையும்.

மேற்படி ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ ச.சபாரத்தினக் குருக்கள் தலைமையில் இடம்பெறும்.இந்நிகழ்வில் தினமும் அர்ச்சனை, அபிஷேக நிகழ்வுகள் இடம் பெறும்.

### உடுபுடவை வழங்கல்

பளைப்பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்குயாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தினால் ஒருதொகுதி உடுபுடைவைகளை சாவகச்சேரி, பளைப் பிரதேச செயலர்களின் ஊடாக வழங்கப்படுகிறது.

மாவட்டஅலுவலகத்தினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நிலையத்தில் தைக்கப்பட்ட ஆடைகளின் ஒரு தொகுதியே மேற்படி வழங்கப்படுகின்றதுஎன்று, அடுத்த தொகுதி வெகுவிரைவில் வழங்கப்படவுள்ளதாகவும் யாழ்.மாவட்ட இளைஞர் சேவைகள் அலுவலர்அ.சக்திவேல் தெரிவித்துள்ளார். (செ-75)

### குளிரூட்டிகள் பொருத்தப்படுகின்றன

யாழ் போதனா வைத்திய சாலை பிரேத அறையிற்கான குளிரூட்டிகள் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுகப்பட்டுள்ளன.

மேற்படி நான்கு குளிரூட்டிகளும் கடந்த ஜனவரி மாதம் செஞ்சிலுவைக்கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட போதும் இதுவரை இவற்றைப் பொருத்தி இயங்கவைப்பதற்கான தொழில்நுட்பவியலாளர்களை தென்பகுதியிலிருந்து எதிர்பார்த்து சலிப்படைந்த நிலையிலேயே மேற்படி இயந்திரங்களை 'ஒட்டோ கூலேர்ஸ்' நிறுவனத்தினரின் உதவியுடன் பொருத்தும் தீர்மானம் எடுக்கப்பட்கின்றது78

சேவை உணர்வுடன்

# பணியாற்றும் அஞ்சலக பணியாளர் போற்றுதலிற்கு உரியாவர்கள்

## அஞ்சலக புகு விழாவில் உரை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை அஞ்சலகம் 50 ஆண்டுகளுக்குப் பின்னர் வட்டுக்கோட்டை மத்தியில் உள்ள புதிய தோர் கட்டிடத்துக்குள் பிரவேசித்திருக்கிறது. அஞ்சலகத்தை அரவணைத்துப் பாதுகாக்கும் பொறுப்பு இப்பிரதேச மக்கள் அஞ்சலக சேவையை மக்கள் சேவையாக நடத்தும் பணி அஞ்சலக ஊழியர்களைச் சார்ந்தது.

வட்டுக்கோட்டை அஞ்சலக புதிய கட்டடம் புகுவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஓய்வுபெற்ற வடபிராந்திய அஞ்சல் அத்தியட்சகர் சி. தர்மராஜன்

வட்டுக்கோட்டை அஞ்சல் அதிபர் மு. சண்முகம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

வட்டுக்கோட்டை அஞ்சலக முன்னாள் அதிபர் எஸ் ஜெயரத்தினம் தமது கரையில் அஞ்சலகத்துக்கு கிரந்தரமான கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு வட்டுக்கோட்டையில் உள்ள பெரியோர்கள் பாடுபட வேண்டும்: அதற்கான காணியை அன்பளிப்பாக வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மூத்த எழுத்தாளர் பாரதிநேசன் சின்னத்தம்பி தமது வாழ்த்துரையில், அஞ்சலகமும் மக்களும் நெருங்கிய நேசபூர்வமான உறவுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். சேவை உணர்வுடன் செயற்பட்டு வருக அதிபர்உட்பட அஞ்சலகப் பணியாளர் பாராட்டுக்கு உரியவர்கள் என்று கூறினார்.

சட்டத்தரணி எஸ். பாக்கியநாதன், விவாக மரணம் பதிவாளர் சி. முருகதாசன் முதலியோரும் வாழ்த்துரை நிகழ்த்தினார்கள் [வ]

# யாழ். மாநகரசபை நடாத்திய உணவு, பழவகை பதனிடல் கண்காட்சி

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நகர்ப்புற அடிப்படைச் சேவைத் திட்டம் பஞ்சம் பட்டினிக்கு எதிரான இயக்கத்தினதும், யுனிசெவ் நிறுவனத்தினதும் அனுசரணையுடன் வண்ணார்பண்ணையில் உணவு பதனிடல், பழவகை சார்ந்த பதனிடல் சுகாதார ரீதியன உணவு தயாரிப்பு பற்றிய பொருட்காட்சி ஒன்றினை அண்மையில் நடாத்தியது.

வண்ணார்பண்ணைப் பிரிவுக்கான கிராம அலுவலர் க. ஆறுமுகராசா தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ தெய்வேந்திரன் பொருட்காட்சியை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

நகர்ப்புற அடிப்படைச் சேவைத் திட்டத்தின் இணைப்பாளர் ஏ.யேசுரத்தினம் இப் பொருட்காட்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-77)

# காஷ்மீர் குஜராத் எல்லைகளில் பாக்-தீவிரவாதிகள் ஊடுருவல்

(புதுடில்லி)

தொகையான ஆயுதம் தாங்கிய 60 தீவிரவாதிகளை காஷ்மீர் பள்ளத் தாக்குப் பகுதிகளுக்குள் ஊடுருவ விடுவதற்சாகப் பாகிஸ்தான் எடுத்த பாரிய முயற்சியை இன்று பாதுகாப்புப் படைகள் முறியடித்ததாக இந்தியா தெரிவிக்கிறது.

குப்பு வாராப் பிரிவிலுள்ள கண்டுவாராவில் எல்லை தாண்ட இந்தத் தீவிரவாதிகள் முற்பட்ட பொழுது க்ண்காணிப்புப் படையினர் எதிர்த்தனர். அப்போது பாதுகாப்பு படையினர் மீது தீவிரவாதிகள் சரமாரியாகச் சுடத் தொடங்கினரென்றும் சொல்லப்படுகிறது.

இருதரப்பினருக்குமிடையில் சண்டை பலமணி நேரம் நீடித்தது இதில் ஊடுருவல்காரர் ஒருவர் இறந்தார் வேறு இருவர் பிடிபட்டனர் ஏனையோர் அருகிலிருந்த காடுகளுக்குள் ஒழித்திருக்கலாமென்பசால் எல்லைப் பாதுகாப்புப்படையினர் ஊடுருவல் காரர்களைத் தேடும் பணியில் இறங்கினர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் ஜம்மு காஷ்மீர் எல்லையைத் தாண்டி வருவதற்காகப் பல்லாயிரம் தீவிரவாதிகள் காத்துக் கொண்டு நிற்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் ஹிஸ்புல் முஸ்தீ, வஸ்கரேதொய்யா, பஞ்சால் போன்ற பயங்கரவாத இயக்கங்களைச் சேர்ந்தவர்களென்றும் எல்லை நெடுகலும் பல்லாயிரக்கணக்கான பாகிஸ்தான் துருப்புகள் குவிக்கப்படுகின்றனவென்றும் சொல்லப்படுகிறது.

இதே வேளை 40க்கு மேற்பட்ட தீவிரவாதப் பயிற்சி முகாம்கள் பாகிஸ்தானில் இயங்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் குஜராத் எல்லைகளில் பாகிஸ்தான் படைகளைக் குவிப்பதையிட்டு பயப்படத் தேவையில்லையென்று பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச்பர்னான்டோ ஒரு செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் தற்பாதுகாப்புக்காக எல்லைகளில் படைகளைக் குவித்திருக்கலாம் என்றும் குஜராத் எல்லையில் சுட்டு வீழ்த்தப்பட்ட விமான வழக்கு சர்வதேச நீதிமன்றில் இருப்பதாலும் குவித்திருக்கலாம் என்று தெரிவித்தார். (து)

குவைத், சவூதி

# நாடுகள் மீதான சதாமின் தாக்குதலை எதிர்கொள்ள எந்நேரமும் தயார்

## அமெ. பாதுகாப்பமைச்சர் தெரிவிப்பு

(குவைத்)

சதாம் ஹுசேன், குவைத்திற்கு எதிராகவோ அல்லது சவூதி அரேபியாவிற்கு எதிராகவோ தாக்குதல் நடத்த முற்படும் பட்சத்தில் அதனைத் தடுக்கத் தயாராக இருக்க வேண்டியது அவசியம் என அமெரிக்கப் பாதுகாப்பமைச்சர் வில்லியம் கோஹேன் தெரிவித்துள்ளார்

குவைத் பாலைவனப் பகுதியில் அமெரிக்கத் துருப்பினர் மேற்கொண்ட இராணுவ ஒத்திகையை பார்வையிட்டபோது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இராணுவ ஒத்திகையை நேரடி ஒளிபரப்பாக ஈராணுக்கும், ஈராக்கிற்கும் காட்ட வேண்டும். அதன் மூலம் அவர்கள் அமெரிக்கத் துருப்புக்கள் தயார்நிலையில் உள்ளதைப் புரிந்துகொள்வார்கள்.

ஐக்கிய நாடுகளின் ஈராக்கிற்கு எதிரான தீர்மானத்திற்குச் சகல நாடுகளும் தொடர்ந்து ஆதரவு தெரிவித்து வருவதாகவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார் (உ)

# ஆஸி. நோக்கி படகில் சென்ற 220 பேர் நீரில் மூழ்கி மரணம்?

(ஹவானா)

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுகளை நோக்கிச் சென்று கொண்டிருந்த படகொன்று இடையில் காணாமல் போய்விட்டதையடுத்து அதில் பயணம் செய்த 220 பேரும் நீரில் மூழ்கி இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

கிறிஸ்மஸ் தீவுகளை நோக்கிப் புறப்பட்ட படகானது குறிப்பிட்ட காலங்கள் கடந்த பின்னரும் இந்தோனேசியாவிற்குத் திரும்பிவரவில்லை என்பதையும்,

படகினைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதையும் நோக்கியே அவர்கள் கடலில் மூழ்கி இறந்திருக்கலாம் என முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் படகு கடலீல் சென்ற காலத்தில் மோசமான கால நிலை நிலவியதாகவும் கூறப்படுகிறது. (உ)

உலகில்,

# தினமும் பஞ்சம் பசி பட்டினியால் 84 கோடி மக்கள் வாட்டம்

## ஐ. நா. தகவல்

(லண்டன்)

தற்போது உலகில் வாழும் 600 கோடிக்கும் மேற்பட்ட சனத்தொகையில் பின்தங்கிய நாடுகளில் வாழும் 84 கோடி மக்கள் தினமும் பசி, பட்டினியால் வாடுவதாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

உலகில் 100 கோடிவரையான மக்கள் சுத்தமான குடிநீருக்கே திண்டாட வேண்டிய நிலை காணப்படுவதுடன், 150 கோடி மக்கள் தினமும் ஒரு டொலருக்கும் குறைவான பணத்தை வைத்து வாழ்க்கை நடத்த வேண்டிய இக்கட்டான சூழ் நிலையிலுள்ளனர்.

600 கோடியை உலக சனத்தொகை தாண்டிவிட்ட இவ்வேளையில், உலகின் தற்போதைய செலவீட்டினை விடவும் மேலதிகமாக 900 கோடி டொலர் பணத்தினை செலவிடுவதன் மூலம் உலகில் வாழும் சகலருக்கும் சுத்தமான குடிநீர் என்ற நிலையை எட்ட முடியும்.

மேலும் 1300 கோடி டொலரை கூடுதலாகச் செலவிட்டு சகலருக்கும் உணவு வழங்கி பஞ்சம் என்ற நிலையைப் போக்கமுடியும்.

கடந்த ஆண்டில் முழு உலகிலுமே விளம்பரங்களுக்காக 43 ஆயிரத்து 500 கோடி டொலர்களும், இராணுவ விவகாரங்களுக்காக 78 ஆயிரம் கோடி டொலரும் செலவிடப்பட்டிருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் மதிப்பீட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பாக். முன்னாள் பிரதமர் மீது மற்றுமோர் புதிய குற்றச்சாட்டு இந்தியாவுக்கு உளவு வேலை பார்த்தார்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் இராணுவ அரசால் கடந்த 6ஆம் திகதி ஆயுட்காலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு பதவி கவிழ்க்கப்பட்ட பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்மீது மற்றுமோர் தேசத்துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

அயல் நாடான இந்தியாவுக்கு பாகிஸ்தான் பற்றிய இரகசியத் தகவல்களை வழங்கியதாக புதிய குற்றச்சாட்டு அமைகிறது.

காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் குறித்து நவாஸ் ஷெரீப் இந்தியாவுக்கு தகவல் அளித்ததாக புதிய குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்பு ஆட்கடத்தல் விமானக்கடத்தல், கொலைமுயற்சி ஆகிய குற்றங்கள் சுமத்தப்பட்டு ஆயுட் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருப்பது தெரிந்ததே. [உ]

# உலக தரிசனம்

# வரும் சட்ட சபைத் தேர்தலை ஒட்டி அ.இ.அ.தி. மு.க விலிருந்துவெளியேற்றம்

(சென்னை)

தமிழ் நாட்டில் அடுத்த ஆண்டு தேர்தல்கள் வரவிருப்பதை முன்னிட்டு கட்சியை வலுப்படுத்தும் நோக்கத்துடனேயே மேல் மட்டப் பதவிகளில் சிலமாற்றங்கள் செய்ததாக செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

கட்சித் தொண்டர்களுடன் தான் நடத்தியவிரிவான ஆலோசனைகளின் போது அவர்கள் தெரிவித்த விருப்பங்களின் அடிப்படையிலேயே இந்த மாற்றங்கள் செய்யப்பட்டன என்று மேலும் தெரிவித்தார் ஜெயலலிதா.

இப்பொழுது கட்சியின் பொதுக் குழுவைக் கூட்டுவதற்கு தேவையில்லை யென்றும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில் அ.இ.அ.தி.மு.க. வின் முக்கிய உறுப்பினர்களான சேடப்பட்டி முத்தையா கருப்புசாமி பாண்டியன் எஸ்.ரகுபதிஆகியோரை செல்வி ஜெயலலிதா கட்சியிலிருந்து வெளியேற்றியிருக்கிறார்.

கட்சியின் குறிக்கோள் கொள்கைகளுக்கு மாறாக நடந்து கொண்டதாலும் கட்டுப்பாட்டை மீறி கட்சிக்கு அவப் பெயரை ஏற்படுத்தியதாலும் இவர்கள் மீது இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் முத்தையா அ.இ.அ.தி.மு.க. பொருளாளர் பதவியிலிருந்துநீக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கதென்றும்.

இதேபோன்று கருப்புசாமி முத்தையா போன்றோர் முக்கியபதவிகளில் இருந்து விலக்கப்பட்டிருந்தனர் என்றுசெய்திகள் தெரிவிக்கின்றன. (து)

# பொருட்கள் விலையேற்றத்தை எதிர்த்து தமிழகத்தில் ஆர்ப்பாட்டம் ஜெயலலிதா

(சென்னை)

சேரன் அரிசி மண்ணெண்ணெய் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை முன்வைத்தும் மற்றும் இதர பிரச்சினைகளை முன்வைத்து மத்திய அரசுகளின் செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரிய ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இம் மாதம் 20 ஆம் திகதி தமிழ்நாடு மாவட்ட கட்சித் தலைவர் அலுவலகர்களின் முன் 7 தமிழ்நாடு அ.இ.அ.தி.மு. கட்சி கண்டன ஆர்ப்பாட்டங்களைச் செய்ய திட்டமிடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (து)

## செய்திக் குவியல்

★ இந்தோனேசியாவின் முன்னாள் ஜனாதிபதி சுஹாட்டோவை நீதிமன்றில் நிறுத்த வேண்டும். என்று நூற்றுக் கணக்கானோர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

★ தென் கொரியாவில் காட்டுத் தீ பரவி வருவதால் மக்கள்இடம்பெயரத் தொடங்கியுள்ளனர்.

★ இந்த வருட அமெரிக்க வரவு செலவுத் திட்டத்தில் 31 ஆயிரம் கோடி டொலர் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

★ மூன்றாவது உலக நாடுகளைச் சேர்ந்த 77 நாடுகளின் பிரதிநிதிகளின் கூட்டம் ஹவானாவில் நேற்றுத் தொடங்கியுள்ளது.

★ பெங்களூர் றோசா ஏற்றுமதித் தடை நீக்கப் பட்டது.

★ பிரான்சுக்கு இந்திய ஜனாதிபதி நாராயணன் செல்ல இருக்கிறார். இந்தியத் தலைவரொருவர் பிரான்சுக்குச் செல்வது இதுவே முதல் தடவையாகும். (து)

# இந்திய அதிபர் நாராயணனுக்கு பிரான்சில் அமோக வரவேற்பு

(பாரிஸ்)

இந்திய ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் பிரான்சிற்கு அரச முறைப்பயணத்தை மேற்கொண்டுள்ளளார்.

இந்தியாவின் தலைவர் ஒருவர் பிரான்சிற்கு செல்வது இதுவே முதல்முறையாகும்.

இந்திய அதிபருக்கு சிறந்த வரவேற்பு அளிப்பதற்கு பிரான்ஸ் அரசு ஏற்பாடுகளைச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்று இருநாட்டுத் தலைவர்களுக் மிடையில் கலாச்சார பொருளாதார உறவுகள் பற்றிப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன என்று அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

# ரசிகர் மன்றங்கள் மூலமே சிறந்த நிகழ்ச்சிகளை உருவாக்கலாம்

நாட்டிலுள்ள சகல ஊர்களிலும் தொலைக்காட்சி வானொலி பத்திரிகை ரசிகர்கள் மன்றங்கள் அமைக்க வேண்டும். என்று மலேசிய தொலைத்தொடர்பு வானொலி துணை அமைச்சர் குறிப்பிட்டார்.

அவர் செய்தியாளர்கள் மத்தியில் இதுபற்றிக்குறிப்பிடுகையில் இந்த ஊடகத் துறைகள் மூலமாகரசிக்கின்ற தன்மைகள் நல்லதை இனங்காணும் தன்மை என்பன உருவாகும் என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் பத்திரிகையாளர் மத்தியில் குறிப்பிடுகையில் நாட்டுக்கு நன்மை தரும் செய்திகளையும் தொலைக்காட்சி அமைப்புகளையும் வானொலி நிகழ்ச்சி வடிவங்களையும்சிறந்தரசிகர்கள் மூலமாகவும் விமர்சகர்கள்மூலமாகவும்வளர்க்கலாம்

# 1000 பேர் வேலை நீக்கம்

அனைத்துலக ஒளி, ஒலி பரப்புச் சேவை நிறுவனமான பி.பி.சி பொருளாதார நெருக்கடி காரணமாக ஆயிரம் தொழிலாளர்களை வேலைநிறுத்தம்செய்துள்ளது

பல்வேறு மொழிகளிலும் தனது சேவையை விஸ்தரித்திருக்கும் மேற்படி செய்திச் சேவை நிறுவனத்தில் 23 ஆயிரம் தொழிலாளர் பணிபுரிந்து வந்தனர்.

இந்நிறுவனம் வருடம் ஒன்றுக்கு 28 பில்லியன் பிரிட்டன் பவுண்களைச் செலவு செய்து செய்திப்பணி புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### வெளிநாட்டு தூதரகங்களில்

## எழுதுநர் பதவிகளுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(மானிப்பாய்)

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் துதரகங்களில் உள்நாட்டு நியமன முறையிலான எழுதுநர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொது எழுதுநர் சேவை. மாகாண எழுதுநர் சேவை உள்ளூராட்சி எழுதுநர் சேவ ஆகிய சேவைகளிலிருந்து தெரிவு செய்யத் தகுதிவாய்ந்த அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி இம் மாதம் 24ஆம்திகதியாகும். இது சம்பந்தமான முழு விபரங்கள் டங்கிய வர்த்தமானியின் பிரதியை வலம்புரி அலுவலகத்தில் பார்வையிடலாம்.

(120)

# கிளிநொச்சி வைத்தியசாலையில் கடந்த வருடத்தில் 186 பேர்மரணம்

### பெருமளவினர் மூளை மலேரியாவால் பாதிப்பு

(ஆவரங்கால்)

கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலையில் கடந்த ஆண்டு மட்டும் 186 மரணங்கள் சம்பவித்துள்ளதாகவும் அவற்றுள் குழந்தை மரணம் 12 என்றும் 06 பேர் கர்ப்பிணிகள் மரணம் என்றும் வைத்தியசாலை அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

அவ் அறிக்கை மேலும் தெரிவிக்கையில் மலேரியா மூளை மலேரியா, நெருப்புக் காய்ச்சல் கொலரா போசாக்கின்மை இராணுவ நடவடிக்கை போன்ற இன்னோரன்ன காரணங்களே இத்தகைய மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

15 ஆயிரத்து985 பேர்மலேரியா நோயினாலும் 6602 பேர் குருதிச் சோகையினாலும் 15 ஆயிரம் பேர் நெருப்புக்காய்ச்சல் நோயினாலும் பெருமளவினர் மூளை மலேரியா நோய்த்தாக்கத்திற்குட்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வீதி விபத்துக்கள் பாம்புக்கடி தற்கொலை முயற்சிகள் போன்றவற்றிற்காகவும் பலர் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப்பகுதியில் எக்ஸ்-றே இயந்திர வசதி பொருத்தப்பட்ட வைத்தியசாலை இது வென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-57)

### மாணவர்களின் கல்வித் திறனை

## வளர்க்கும் விதத்தில் பயிற்சிகள் உலகவங்கியின் உதவியுடன் முன்னெடுப்பு

### கல்வித் திணைக்கள வட்டாரங்கள்

(கொழும்பு)

உலக வங்கியின் உதவியுடன் மாணவர்களின் கல்வித் திறனை வளர்க்கும் விதமாக பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்,

இத்திட்டத்தின் கீழ் மாணவர்களின் வாசிப்புத் திறன், எதையும் ஆராய்ந்து முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றை வளர்க்கும் விதத்தில் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியளிக்கப்படவுள்ளனர்.

மாவட்டம் தோறும் 25 ஆசிரியர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு சுமார் 400 பேர் வரையில் பயிற்சியளிக்கப் படுவர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது,

(க)

## விஷமிகளின் நாசகார செயலால் பண்ணாகம் பகுதி இருளில் மூழ்கியது

### புது வருடக் கொண்டாட்டம் குழப்பம்

[மாவடி]

பண்ணாகம் பகுதியில் விஷமச் செயல்புரிபவர்களின் அட்டகாசங்கள் சிலகாலமாக அதிகரித்துக்காணப்படுகிறது.

புதுவருடதினத்தை கொண்டாடும் வகையில் இப்பகுதி தனியார் கல்வி நிலையமொன்றில்இரவு நேரக்கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனைக் குழப்பும் நோக்கம் கொண்ட விஷமிகள் சிலர் மின் இணைப்புக் கம்பிகள் மேல் சைக்கிள் செயினை எறிந்து மின் இணைப்பைத் துண்டித்துள்ளனர்.

இதனால் அப்பகுதி முழுவதுமே இருளில் மூழ்கியதுடன் தனியார் கல்வி நிலையத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தகலைநிகழ்ச்சிகளும் திட்டமிட்டபடிநடத்தி முடிப்பதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

சிவராத்திரி தினத்தன்றும் மேற்படி அட்டகாசக் கும்பல்கள் தனியாரது வேலிகளை வெட்டியும், கொழுத்தியும் தம் கைவரிசைகளைக் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

[உ]

### யாழ். குடாநாட்டில்

## சமூகஉட்கட்டமைப்பு சீர்குலைவினால் தற்கொலை முயற்சிகள் அதிகரிப்பு

### பொது நிறுவனங்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுவோர் தொகை அண்மைக்காலங்களில் அதிகரித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னைய காலங்களிலும் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டு வந்தபோதும், 95 ஆம் ஆண்டின் பின் இத்தொகை படிப்படியாக அதிகரித்து வருவதனை அவதானிக்க முடிகிறது.

கடந்த இரு வருடங்களில் மட்டும் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட 77 பேர் பல்வேறு மருத்துவ மனைகளிலும் கிசிச்சை பெற்றுள்ளனர்.

இவர்களில் அனேகர் இளம் குடும்பப் பெண்கள் எனத் தெரியவருகிறது.

குடும்ப நெருக்கடி, வறுமை பொருளாதார உறுதிப்பாடின்மை, காதல் விவகாரம், வர்த்தக முயற்சிகளில் தோல்வி போன்ற காரணங்களே யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுத்தவரை, தற்கொலை ஊக்கிகளாக செயற்படுவது தெரியவந்துள்ளது. தொடரும் யுத்த நெருக்கடியும் வலுவான காரணம் எனக்கூறப்படுகிறது.

இவ்வாறான நிலைமைகளுக்கு சமூக உட்கட்டமைப்புச் சீர்குலைவே காரணம் என மனித உரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

(உ-59)

## புதுவருடக் கொண்டாட்டம் இளைஞரின் கை துண்டிப்பு

[மட்டக்களப்பு]

நண்பர்களுடன் சேர்ந்து பட்டாசு கொளுத்தி புதுவருடப்பிறப்பினைக் கொண்டாடிய இளைஞர் ஒருவர் பட்டாசு தவறுதலாக தீப்பற்றிக் கொண்டதில் மணிக்கட்டிற்கு கீழ் கை ஒன்றை இழந்துள்ளார்.

இச்சம்பவம் மட்டக்களப்பு வாழைச்சேனையை அடுத்துள்ள மயிலங்கரைச்சியில் இடம் பெற்றுள்ளது.

மேற்படிசம்பவத்தில் கேதாரகுமார்(வயது 24) என்னும் வாலிபர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைக்குஉட்படுத்தப்பட்டு ஒரு கை அகற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

[சு-60]

## முழுநேர பாடநெறிக்கு விண்ணப்பம்

[மானிப்பாய்]

மொறட்டுவையிலுள்ள இலங்கை ஜேர்மன் தொழிநுட்பப் பயிற்சி நிறுவனம் தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் இரண்டாயிரம் ஆண்டிற்கான முழுநேரப் பாடநெறிக்கான அனுமதிக்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

விண்ணப்பதாரர் 13.10. 2000 திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டவரையும் க. பொ. த சாதாரண தரப் பரீட்சையில் இருதடவைக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம் தமிழ் மொழி போதனா மொழி மற்றும் கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

இதுசம்பந்தமான முழுவிபரங்களடங்கிய வர்த்தமானியின் பிரதியை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

[க-120]

## அலங்காரத் திருவிழா

(அரியாலை)

குப்பிழான் வீரமனை அருள்மிகு கன்னிமாகெளரி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெற்று, நாளை திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

(செ- 06)

## மகாகவியின் ஆறுகாவியங்கள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் புத்தகப் பண்பாட்டை நோக்கிய மாதாந்தப் பௌர்ணமி நிகழ்வில் ''மகாகவியின் ஆறுகாவியங்கள்'' நூல்வெளியீடு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 18 ஆம் திகதி மாலை 4 . 30 மணிக்கு கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உருத்திர மூர்த்தி என்னும் இயற்பெயர் கொண்ட மகாகவி அளவெட்டிக் கிராமத்தைப்பிறப்பிடமாகக் கொண்டவர் என்பது பலருக்குத் தெரிந்திருக்காது.

(க)

## 33 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு தேசிய அபிவிருத்தி வங்கி வழங்கியது

(கொழும்பு)

தேசிய அபிருத்தி வங்கி கடந்த 5 வருடங்களில் 33 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பினை வழங்கியுள்ளது.

இதற்கென வங்கி 99 ஆயிரம் கோடி ரூபாய்களைச் செலவிட்டுள்ளதென தேசிய அபிவிருத்தி வங்கி வெளியிட்டுள்ள செய்திக்குறிப் பொன்றில் ()தரிவிக்கப்பட்டுள்ளது

கடந்த 3 வருடகாலத்தில் கைத்தொழில், தொலைத் தொடர்பு, ஆடை தயாரிப்பு, மற்றும் பெருந்தோட்டத் துறைகளில் அதிக எண்ணிக்கையானோர்க்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

இக்காலப் பகுதியில் 4 ஆயிரத்து 800 பேருக்கு, 6 ஆயிரத்து 700 கோடி ரூபாவை நீண்டகால, குறுங்கால கடன்களாக தேசிய அபிவிருந்தி வங்கி வழங்கியுள்ளது.

அத்துடன், ஆயிரத்து நானூறு சிறிய நடுத்தரரக அளவிலான திட்டங்களுக்கென 20ஆயிரம் கோடி ரூபாய்களை நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படும் 10 கிளைகளூடாக நிதியுதவியாக வழங்கியுள்ளது.

கடந்த ஆண்டுமுதல் கடன் முதலீடுகள் 23 வீதத்தினால் அதிகரித்திருப்பதாகவும் அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

### இடம் பெயர்ந்தோருக்கு

## பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க ஊழியர் காலை உணவு வழங்கினர்

### உடுபுடவை வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு, மற்றும் தென்மராட்சிப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறை பகுதி தேவாலயங்களில் தங்கியுள்ளவர்களுக்கு காலை உணவைபருத்தித்துறை பல. நோக்கு கூட்டுறவுச்சங்க ஊழியர் வழங்கியுள்ளனர்.

தேவமாதா, லூர்துமாதா கோவில்களில் தஞ்சமடைந்துள்ள 660 பேருக்கே இவ் உணவு முதற்கட்டமாக வழங்கப்பட்டதாகவும் மேலும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மேற்படி ஊழியர் தெரிவித்துள்ளனர்.

உடுபுடவைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

(க)

### பத்திரிகையாளர் இல்லம் மீதான

## தாக்குதலிற்கு பயன்பட்டகிரனேட்டின் கிளிப்புப்பகுதி கொழும்பிற்கு அனுப்பிவைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிரேஷ்டபத்திரிகையாளர் ஜி.நடேசன் வீட்டில் அண்மையில் நடாத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் கிரனேட்டின் கிளிப் பகுதி மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜே.விஸ்வநாதனின் பணிப்புரைகளுக்கமைய கொழும்பு இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு பொலிஸாரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான இரசாயன ஆய்வினை விரைவில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி கேட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பு நகரில் பாரிய ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

(சு-60)

## இரவு முழுவதும் கூக்குரலிட்டும் ஒருவரும் என்னைத் தூக்கவில்லை

### கிணற்றில் வீழ்ந்தவர் தகவல்

(யாழ்ப்பாணம்)

கிணற்றுள் விழுந்தவயோதிபப் பெண் நாரிமுறிந்தநிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குப்பிழானைச் சேர்ந்த ராசமணி (வயது 58) என்பவரே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவராவர்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் உறவினர் வீட்டுக்குச் சென்றவேளை இருட்டில் வழிமாறிவந்ததினால் புழக்கமில்லாத கிணற்றுக்குள் விழுந்தேன் இரவு 8 மணியளவில் விழுந்த நான் கூக்குரலிட்டேன் எவரும் வரவில்லை இரவு முழுவதும் பயத்துடன் இருந்தேன்.

விடியும்போது மறுபடி சத்தமிட்டேன் அதன் பின்னரே அதிகாலை 4 மணியளவில் என்னை கிணற்றில் இருந்து வெளியே எடுத்தார்கள். இச்சம்பவம் கடந்தசனிக்கிழமை 8 ம் திகதி இடம் பெற்றது. தெல்லிப்பழையில் சிகிச்சை பெற்று மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்திய சாலைக்கு நேற்று முன்தினம் கொண்டுவரப்பட்டதாக மேலும் அவர் கூறினார்.

(க-12)

## ★ 1998 முதல் இன்றுவரை சர்வோதய சிரமதான இயக்கம் 10இலட்சத்து 86ஆயிரம் ரூபா கடன்

(தென்மராட்சி)

யாழ். மாவட்டத்தில் இயங்கிவரும் சர்வோதய சிரமதான இயக்கம் 1998ம் ஆண்டு முதல் இதுவரை சுய தொழில் உதவித்திட்டத்தின் கீழ் 10 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாவை 220 பேருக்குக் கடனாக வழங்கியுள்ளதாக அந்நிறுவனத்தின் செயல் திட்டப் பணிப்பாளர் எஸ். வி. சங்கரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் தென்மராட்சி பிரதேசத்திலுள்ள 138 கணவன்மார்களை இழந்த குடும்பங்களின் வருமான மீட்டும் திட்டத்துக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது:

அதேபோலவே பெண்கள் தலைமை ஏற்றுநடத்துகின்ற 68 குடும்பங்களுக்கும் கடனுதவி வழங்கப்பட்டதாகசெயல் திட்டப்பணிப்பாளர் குறிப்பிட்டார்.

அத்துடன், குடாநாட்டில் மொத்தமாகவுள்ள 611 முன் பள்ளி ஆசிரியைகளுள் 263 பேருக்கு முன் பள்ளிக்கல்வி தொடர்பான முழுமையான பயிற்சியும் வழங்கப்பட்டது.

மேலும் யுத்தத்தின் பொருட்டு சேதமடைந்த நிலையில் இருந்த 32 முன் பள்ளிக் கட்டடங்களை அந்தந்தக் கிராமங்களின் பங்களிபபுடன் புனரமைப்புக் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (77)

## தொழில் அமைச்சர் கொரியாபயணம் இளைஞர் நிலைகுறித்து ஆராய்வார்

(கொழும்பு)

கொரியாவில் தொழில் புரியும் இலங்கை இளைஞர்களின் நிலைபற்றி ஆராய்வதற்கென தொழிலமைச்சர் டபிள்யு. டி. செனவிரத்ன கொரியா செல்லவுள்ளார்.

தற்போது கொரியாவில் இலங்கையைச் சேர்ந்த இரண்டாயிரத்து 500 இளைஞர்கள் தொழில் புரிகின்றனர்.

இரு வருடகாலப் பயிற்சியின் பின் சிறந்த முறையில் பணியாற்றின் மேலும் ஒரு வருடத்திற்கு அங்கு பணியாற்ற கொரிய அரசு அனுமதியளித்துள்ளது,

இருந்தபோதிலும், இலங்கை இளைஞர்கள் சட்டவிரோதமான முறையில் அங்கிருந்து வருவது தொடர்பாக கொரிய அரசும் கொரிய வர்த்தக சங்கமும் சுட்டிக் காட்டியுள்ளது.

இதனையடுத்து கொரிய அரசுடனும், வர்த்தக சங்கங்களுடனும் இவை தொடர்பான விபரங்களையறிந்து பேச்சுக்களை நடாத்தவெனவே தொழிலமைச்சர் கொரியா செல்லவுள்ளார்.

இதேசமயம், தனது பயணத்தின்போது, மேலும் பல இலங்கை இளைஞர்களுக்கு கொரியாவில் பணி வழங்குவது சம்பந்தமாகவும் ஆராய்வார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## மட்டக்களப்பில் கடந்த வருடம் 259 பேர் காணாமல் போயுள்ளனர்

### சர்வதேச செஞ்சிலுவை அறிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வருடம் 259 பேர் காணாமல் போயுள்ளதாக சர்வதேச செஞ்லுவைச் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, காணாமல் போனோரில் 222 பேர் பற்றிய தகவல்கள் பெறக்கூடியதாக இருந்தது. ஏனையோர் பற்றிய தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை.

கடந்த வருடம் மட்டக்களப்பு பகுதியில் படையினரதும், விடுதலைப்புலிகளினதும் 71 சடலங்கள் சர்வதேச செஞ்லுவைச் சங்கத்தினரால் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

3308 பொதுமக்கள் மட்டக்களப்பு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு போரின் விளைவுகள் காரணமாக தமக்கு உதவியும் பாகாப்பும் கோரியுள்ளனர். (சு-60)

## 107 வயது மூதாட்டி மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பழுகாமத்தில் 107 வயதுடைய மூதாட்டி ஒருவர் சித்திரை வருடப் பிறப்பன்று மரணமானார்.

தா. சந்தனப்பிள்ளை என்ற மூதாட்டியே இப்பிரதேசத்தில் வாழ்ந்த மிகக் கூடிய. வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. [சு-60]

## திருட்டுக்கள் அதிகரிப்பு

கோப்பாய் இராசவீதிப் பகுதியில் திருடர்கள் தொல்லை நாளுக்கு நாள்அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

வீடுகளில் வைக்கப்பட்டுள்ள தோட்டத்திற்கான பாவனையிலுள்ள பைப்புக்கள், மண்வெட்டிகள், மருந்து தெளிக்கும் கருவி போன்றன திருடப்பட்ட சம்பவங்கள் அண்மையில் நடைபெற்றுள்ளன. (க-79)

## மத்திய மாகாண

## 15மேலதிக கல்விப்பணிப்பாளர்களுள் ஒருவர் கூட தமிழர் இல்லையாம்

### கல்வியாளர் விசனம்

மத்திய மாகாணத்தில் மேலதிக கல்விப் பணிப்பாளர்களாக 15 பேர் நியமிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களில் தமிழர்கள் எவரும் இடம்பெறாதது குறித்து கடும் விசனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கடும் ஆட்சேபனையைத் தெரிவித்துள்ள மத்திய மாகாண தமிழ்க்கல்வியமைச்சர் வீ. ராதாகிருஷ்ணன் மாகாணசபையின் மாதாந்தக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்யவிருந்தார்.

எனினும் இதுகுறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமென மத்தியமாகாண முதலமைச்சர் நந்திமித்திர ஏக்க நாயக்க அளித்த உறுதிமொழியை அடுத்து அவர் தனது வெளிநடப்புத் தீர்மானத்தைக் கைவிட்டார்.

நுவரெலியா, ஹட்டன் உட்பட பலபகுதிகளில் 80 வீதத்திற்கும் அதிகமான தமிழ்ப் பாடசாலைகள் இருந்த போதிலும் தமிழர் ஒருவர் மேலதிகக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்படவில்லை.

மத்திய மாகாணத்தில் தமிழ்க் கல்வி அமைச்சராக நானிருக்கின்ற போதிலும் இந்த நியமனங்கள் தொடர்பாக முதலமைச்சர் என்னுடன் ஆலோசிக்க வில்லை எனவும் ராத கிருஷ்ணன் கவலை தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணத்தில் மாத்தளை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் இவ் வாரம் முதல் 15 பேர் மேலதிக கல்விப் பணிப்பாளர்களாக நியமிக்கப் பட்டுள்ளனர். (சு)

## மட்டக்களப்பில்

## முருகைக் கற்கள் அகழ்ந்தெடுக்கப்படுவது பூரணமாகத்தடை செய்யப்பட்டுள்ளது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காயன்கேணி, மாங்கேணி போன்ற கடற்கரைப் பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் முருகைக்கற்கள் அகழ்ந்தெடுப்பதைத்தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்தில் அகழ்ந்தெடுக்கும் முருகைக் கற்கள் நீறு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

வியாபாரிகள் பெருமளவு முருகைக் கற்களைக் கொள்வனவு செய்வதால் இத் தொழிலில் அதிகமானோர் ஈடுபட்டு நிறைய கற்களை அகழ்ந்தெடும் கின்றனர்.

இதனால் கடலரிப்பு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது இதன் காரணமாகவே முருகைக் கற்கள் அகழ்வது தடை செய்யப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (சு-60)

## மீண்டும் தலைவராகத் தெரிவு

(புலோலி)

சரித்திரப் பிரசித்திபெற்ற ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவராக மீண்டும் திரு. இ. அன்னலிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

இவ் ஆலய மகாண சபைத் தலைவர் திரு. எஸ். கந்தசாமி தலைமையில் மேற்படி ஆலயத்தில் நடைபெற்றது.

வ. கருணாமூர்த்தி செயலாளராகவும் திரு. சி. தங்கத்துரை, திரு. வி. இராசரத்தினம், திரு. ச. கேசவானந்தன் ஆகியோர் உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். (க-52)

## இடம் பெயர்ந்தோரில்

## 284 பேருக்கு இ.செ. சங்கம மருத்துவ சேவையை வழங்கியது

இடம்பெயர்ந்தமக்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மருத்துவ உதவிகளை மேற்கொண்டு வருகின்றது. இடம் பெயர்ந்து மிருசுவில் முகாம் தவசிக்குளம் முகாம், சென்நீக்கலஸ் முகாம் அரசினர் பாடசாலை முகாம்களில் தங்கியுள்ள வர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது இவ்வாறு 284 பேர் மருத்துவ வசதிபெற்றுள்ளனர். இதுவரை மருத்துவ உதவி வழங்கப்பட்ட விபரப்படி,

கடுமையான மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவவில்லை என்றும் ஏனைய சிறுசிறு நோய்களே காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

## கிணற்றில் விழுந்த சிறுமி பலி நாரந்தனையில் பரிதாப சம்பவம்

வீட்டுக் கிணற்றுள் நீர் அள்ளும் போது தவறுதலாக விழுந்த சிறுமி மரணமடைந்துள்ளார்.

நாரந்தனையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் ரவீந்திரன் சோபனா (வயது 09) என்ற சிறுமியே உயிரிழந்தவராவர்.

இவரைக் காப்பாற்றும் முயற்சியில் கிணற்றுள் குதித்த தாயார் அயலவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளார். (க-75)

## நல்லூர் ஐ.வி.க. பதிவு செய்யப்பட்ட வி.க. இடையிலான கிரிக்கெட் போட்டி

[யாழ்ப்பாணம்]

நல்லூர்ஐக்கியவிளையாட்டுக் கழகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி, இன்று ஞாயிற்றுக்கிழமை விளையாடவுள்ள அணிகள் வருமாறு:

★ காலை 9.00 மணிக்கு திருநெல்வேலி மத்திய விளையாட்டுக்கழகம் எதிர் கலைமகள் விளையாட்டுக்கழகம்.

★ மு. ப. 10.00 மணிக்கு ஜெட்லைனர்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் கொய்யாத்தோட்டம் ஐக்கிய விளையாட்டுக் கழகம் (ஏ)

★ மதியம் 12.00 மணிக்கு வெங்கடேஸ்வரா விளையாட்டுக்கழகம் எதிர் விநாயகர் விளையாட்டுக்கழகம் (டி)

★ பி. ப. 2.00 மணிக்கு யுத்கார்மல் விளையாட்டுக் கழகம் எதிர் ஸ்புட்னிக் விளையாட்டுக்கழகம் (ஏ)

மேற்படி ஏ அணிகள் யாவும் ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் விளையாடவுள்ளன.

காலை 9.00 மணிக்கு கோல்ட்ஸ்ரார்விளையாட்டுக் கழகம் எதிர் தபாற்கந்தோர் விளையாட்டுக்கழகம்.

★ மு. ப 10.30 மணிக்கு வை. எம். எச். ஏ (பி) விளையாட்டுக்கழகம் எதிர் ஸ்புட்னிக் (டி) விளையாட்டுக் கழகம.

★ மதியம் 12.00 மணிக்கு ஜி ரி. சற் விளையாட்டுக் கழகம் எதிர் வானவில் விளையாட்டுக்கழகம்.

★ பி. ப. 2.00 மணிக்கு பெப்ஸி விளையாட்டுக்கழகம் எதிர் வில்ஸ் விளையாட்டுக் கழகம்.[டி]

★ பி. ப. 4.00 மணிக்கு நல்லூர்ஐக்கியவிளையாட்டுக் கழகம் (ஏ) எதிர் யுனிபைட் விளையாட்டுக்கழகம்.

மேற்படி (பி) அணிகள் யாவும் விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் விளையாடவுள்ளன

## யுத்த நிறுத்தம் செய்து

## பேச்சுவார்த்தைக்கான சூழலை உடன் ஏற்படுத்த வேண்டும்

### இளைஞர் கழகங்கள் சம்மேளனம் ஜனாதிபதிக்கு மகஜர்

(ஊர்காவற்றுறை)

உடனடியாக யுத்த நிறுத்தம்செய்து பேச்சுவார்த்தைக்கு உகந்த பொருத்தமான சூழலை உருவாக்குமாறு கோரி இளைஞர் கழகங்களின் யாழ். மாவட்ட சம்மேளத்தினர் தேசிய இளைஞர் கழகங்களின் சம்மேளனம், சமூர்த்தி, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

அம்மகஜரில் மேலும் பல வருட காலமாகத்தொடரும் யுத்த நிலைமைகளுக்கு முகங்கொடுத்து வாழும் எமது மக்களின் துன்ப துயரங்கள் எழுத்தில் வடிக்க முடியாதவை இந்நிலையில் மோதல்கள் இடம்பெறும் பகுதிகளில் சிக்குண்டு அல்லலுறும் அப்பாவி மக்களின் நிலை கவலையளிப்பனவாக உள்ளன.

இம் மக்கள் தமக்கு பாதுகாப்பு எனக் கருதும் இடங்களுக்குச் செல்வதற்கு நீர் மானிக்கவும், செல்லவும் வாய்ப்பானதொரு சூழலை உருவாக்க தங்களின் மேலான கவனத்தைச் செலுத்துமாறு தயவாக கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளையும், கசப்புணர்வுகளையும் நீக்க தங்களாலான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வீர்கள் என நம்புகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-75)

நல்லூர் ... நூலகம் ... யாழ்ப்பாணம்

பல் குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல் குறும்பும்இல்லதுநாடு

-குறள்

# வலம்புரி

## இளங்கன்றுகள்

இளங்கன்று பயமறியாது என்பது சமூகத்துப் பழசுகளின் நாவில் சதிராடும் சொற்கள். ஆனால் இன்றோ அப் பயமறியா இளசுகள் இன்னல் கண்டு இடர்களைப் பக் கொதிப்பது பாராட்டற்குரியதே. ஆனால் கட்டுக்கோப்புடன் பிழை பிடிக்க நினைப்பவர்க்கு இரையாகாமல் இலக்குத் தெரிந்த பார்த்தர்களாக வேண்டிய பொறுப் பொன்று இருக்கிறது.

ஏர் பின்னது உலகம் என்றார்கள் உண்டு நிரம்ப. இளைஞர்கள் பின் உலகம் என்பது இன்றைய காலத்தின் தேவை. பழசுகளுக்கு செமிக்காத நிகழ்வுகள் தான். ஆனால் ஒன்று மட்டும் இளைஞர்கள் மறந்து விடக் கூடாது. பவுத்திரமான- உணர்வு பூர்வமாக உழைக்கின்ற பழசுகளும் உண்டு. என்பதை நிதானித்து உணர வேண்டும். அவர்களும் ஒருநாள் இளமைத் துடிப்புடன் இவர்களைப்போல் உழைத்தவர்களே. அவர்களது இலட்சியப் போக்கை, வாழ்வை அலட்சியப் படுத்தாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

பழசும்புதிதும் ஒருங்சே இணைந்து, உணர்ந்து உணர்வு பூர்வமாகத் தத்தமக்கு ஏற்ற பணியைச் செய்திருந்தால் இன்று ஏற்றமடையாமலா போயிருப்போம்.

உலகம் ஒன்று- ஒரே குடும்பமயம் என விஞ்ஞானம்விளம்பும் வேளையிது. அது அவ்வாறாயின் வளைவேறு யாழ்ப்பாணம் வேறு அல்ல. தாளையடி வேறு தாவடி வேறு அல்லதான். அந்த ஓர் உணர்வுக்காய் விழாவை வெறுத்து இரத்தத்தின் இரத்தங்களின் இன்னல் துடைக்க எழுச்சி பெற்ற பல்கலை மாணவர்களைப் பாராட்டாமல்இருக்க முடியாது.

சமூக அங்கங்கள் அனைத்தும் கிளர்ந்தெழுந்தால் முடியாதது ஒன்றில்லை. ஒற்றுமையின் பலம் உணர்வோம் பயன் பெறுவோம். எழுச்சியின் தாக்கம் புரிந்து எதிரிக்கள் தொடை நடுங்க வைக்கலாமன்றோ. அந்த ஒற்றுமைப் பலங்கண்டு விழி பிதுங்கி செய்வதறியாது சிந்தை கலங்காமலா போவர். இன்றைக்கு வேண்டுவது ஒன்று பட்டுழைத்தலே. அதன் அத்திவாரத்தில் மலர்ச்சி காண்போம்.

-அம்பலன் அபிரியர்

# குருவின் ஆதிக்கத்திற்குட்பட்ட 3 ஆம் எண்காரர்

# இரக்க குணம் தெய்வ பக்தி உடையவர்

குருவின் அனுக்கிரகத்திற்கு ஆளான இவர்கள் தன்நம்பிக்கை உடையவர்கள். பொதுவாக இரக்க குணமுடையவர்கள். புராண இதிகாசங்களிலும், பூர்வ ஜென்மத்திலும் நம்பிக்கை உடையவர்கள். நீதியை நிலைநாட்ட உயிரையும் துரும்பென மதித்து அநீதியை எதிர்ப்பவர்கள். ஊருக்கும், நாட்டுக்கும் தம்மை அர்ப்பணிப்பவர்கள். எப்போதும் இவர்கள் துணிவையும், உழைப்பையும் நம்பி இருப்பவர்கள்.

இவ் எண்காரர் தேசாபிமானிகளாகவும், தாம் ஈடுபடும் துறைகளில் கள்ளங்கபடமற்ற முறையில் முழுநேர ஊழியர்களாகவும் செயற்படுவார்கள்.

தியாகம், சேவை மனப்பான்மை போன்ற நிலைகளில் செயற்படுபவர்களும் இவர்களே. இவர்கள் மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என சிரமேற் கொண்டு பொறுமை, அன்பு அடக்கம் முதலிய நற்குணங்களுடன் வாழ்பவர்கள்.

இவ் எண்ணில் பிறந்தவர்கள் சிலர் நல்லவர்களாகவும், சிலர் கெட்டவர்களாகவும் இருக்கிறார்கள். இதற்கு இவ் எண்ணின் ஆதிக்கமே காரணம்.

இந்த எண்ணில் பிறப்பவர்களிற்கு எண்ணின் ஆதிக்கம் முழுமையாக இருக்குமானால் எதையும் பகிரங்கப்படுத்தி ஆதரவு தேடுவார்கள். எந்த எதிர்ப்பு ஏற்பட்டாலும் தாம் நினைத்த காரியத்தைச் செய்துமுடிப்பார்கள்.

ஆதிக்கம் கூடியவர்களானாலும், ஆதிக்கம் குறைந்தவர்களானாலும் தமதுபிற்காலத்தில் ஒரு திருத்த நிலைக்கு வந்து விடுவார்கள். பொதுவாக இவர்களது திறமை, எதிர்காலநிலை என்பவை முப்பத்திமூன்று வயதிற்கு மேலேதான் சிறப்பாக அமையும்.

### தொழில்நிலை, மணநிலை

இவ் எண்காரர்களாக அமையாதவர்கள் எவ்வளவு இருந்தும் முன்னேற முடியாது தவிப்பார்கள். இவர்களிற்கு நிரந்தரத் தொழில் இவர்களது முப்பதாவது வயதிற்கு பின்னர்தான் கிடைக்கும்.

எண் மூன்றைப் பிறப்பெண்ணாகக் கொண்டவர்களின் திருமணம் முப்பது வயதிற்கு மேல் அமைந்தால் தான் சிறப்பானதாக அமையும். இவர்கள் 1, 3, 6, 9 ஆம் எண்காரரை மணந்தால் சுகமாக வாழ்வார்கள்.

### 3 ஆம் திகதியில் பிறந்தவர்கள்

இத்திகதியில் பிறந்தவர்கள் சிறந்த சிந்தனாசக்தி உடையவர்களாகவும், தெய்வபக்தி உடையவர்களாகவும், கணிதம், ஓவியம் ஆகிய துறைகளில் சிறந்தவர்களாகவும் விளங்குவார்கள்.

### 12 ஆம் திகதியில் பிறந்தவர்கள்

இத்திகதியில் பிறப்பவர்கள் தியாகிகள், தன்னலம் கருதாத உழைப்பாளிகள். பொதுவாக இவர்கள் இளம் வயதிலே தாய், தந்தையினரை இழந்து விடுவார்கள். எண்ணின் ஆதிக்கம் குறைந்திருந்தால் மட்டுமே இந்நிலை ஏற்படும்.

### 21 ஆம் திகதியில் பிறந்தவர்கள்

இத்திகதியைச் சேர்ந்தவர்கள் தாம் உண்டு. தம் வாழ்வு உண்டு என்பது போல இவர்கள் சுயநலம் கொண்டவர்களாக இருப்பார்கள். ஏனைய 3 ஆம் எண்காரரைவிட இவர்கள் முன்னேற்ற நிலையில் இருப்பார்கள்.

### 30 ஆம் திகதியில் பிறந்தவர்கள்

இத்திகதியில் பிறந்தவர்கள் நுட்பமான. தீர்க்கமான மூளை உடையவர்கள். துப்பறியக்கூடிய சிந்தனாசக்தி உடைய இவர்கள் துணிச்சல் காரர்களாகவும் இருப்பார்கள்.

(சு)

**ஏ. இராஜநிதி**

---

### குருத்தோலை ஞாயிறு

# துன்ப இருள் அகன்று இன்பம் பரவிட இயேசுவின் பாதம் பணிவோம்

கடந்த ஐந்து வாரமாக புனித வாரத்துக்கு எம்மை தயார்படுத்திய நாம் குருத்தோலை ஞாயிறு ஊடாக இன்று புனித வாரத்துக்குள் நுழைகின்றோம். புனித வாரத்தின் முதல் நாளாகிய இன்றைய இறைவழிபாட்டுச் சடங்குகள் இருபெரும் பகுதிகளை கொண்டமைகின்றது. குருத்தோலைப் பவனி திருப்



பலிப்பூசை எனும் இருபகுதி வழிபாட்டோடு ஆரம்பித்து தொடர்ந்து கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு என்பவற்றை தீர்மானிக்க இருக்கின்றோம்.

சியோன் மகளே மிகுந்த மகிழ்ச்சியால் அக்களி ஜெருசலேம் மகளே ஆர்ப்பரி இதே உன் அரசர் உன்னிடம் வருகின்றார் என்ற இறை வார்த்தைக்கொப்ப ஜெருசலேம் மக்களாகிய திருச்சபை இன்று இயேசுவை அரசனாக ஏற்று அக்களித்து ஆர்ப்பரிக்கின்றது. தாழ்ச்சியின் மறு உருவமான யேசு ஜெருசலேமுக்குள் நுழைந்த போது அம்மக்கள் 'ஓசன்னா தாவீதின் புதல்வா' என அவரை வாழ்த்தி வரவேற்று ஒலிவ் மரக்கிளைகளை கையிலேந்தி உற்சாகத்தோடு புகழ்பாடுகின்றனர். ஒலிவ் மரக்கிளைகள் வெற்றியின் அடையாளம் ஒலிவ் மரக் கிளைகளை கையில் ஏந்திய தன் வழியாக ''நாங்கள் இயேசுவை வெற்றி வீரராக ஏற்றுக் கொள்கின்றோம்'' என்பதை இஸ்ராயேல் மக்கள் உலகுக்கு பிரகடனப் படுத்தினர். இன்று எமது கையில் குருத்தோலை ஏந்தி ஓசான்னா புகழ்பாடி இயேசுவை வெற்றி வீரராக விடுதலை வீரராக ஏற்றுக் கொண்டு புகழ்பாடுகின்றோம்,

இறைமகன் இயேசு தன்னை கடவுளாக காட்டிக்கொள்ளாது அடிமையின் தன்மை பூண்டு மனமுவந்து துன்பப் பாடுகளில் பங்கேற்பதன் ஊடாக தன்னைத் தாழ்த்துகின்றார். அவமானத்தின் சின்னமான சிலுவையை தோளில் ஏற்று அதில் உயிரை தியாகம் செய்ததன் மூலம் மீட்பின் சின்னமாக மாற்றுகின்றார். இறை திட்டத்தை இது வரை நிறைவேற்றியதால் மகிமையில் உயர்த்தப்படுகின்றார்.

இன்று எமது வாழ்வு எப்படி அமைகின்றது. எமது அன்றாட வாழ்வில் துன்பங்களையும், துயரங்களையும் சந்திக்கின்றோம். எத்தனை சவால்களுக்கு முகம் கொடுக்கின்றோம். எத்தனை உறவுகளை இழந்து எத்தனை சொந்தங்களை தொலைத்து நடைப்பிணமாக அலைகின்றோம் இவற்றையெல்லாம் தாங்குவதற்கு நமது ஆன்மாவில் பலமில்லாமல் துவண்டு விடுகின்றோம்.

இவ்வருள், துன்பங்களை எல்லாம் முறியடித்து வெற்றி வீரனாக மகிமைப்படுத்தப் பட்ட இயேசுக்கிறிஸ்துவின் சீடர்களாக நாடும். துன்பங்களை அன்றாட வாழ்வில் சிலுவைகள் ஊடாக உண்மையான மகிமைக்கான இயேசுவின் பக்கம் பார்வையை விரும்பி அவரின் அடிச்சுவட்டில் வாழ முயல்வோம்.

**அமலரட்ணம்**
யாழ்ப்பாணம்.

---

## புத்தாண்டில் மலர்ந்த கவிதை

### புதுவருடம் பிறந்தது

புது வருடமது வந்தது
புவீயின மது மகிழ்ந்தது
புத்தெழில் எங்கும் பிறந்தது
புனிதமாய் புவி இருந்தது!
புது வருடமது மலர்ந்தது
புதுத் தெம்பு மனதில் மிளிர்ந்தது
புத்தாடை எங்கும் ஒளித்தது
புதுமைகள் எங்கும் நிவறந்தது!

நாகமணி மகேந்திரலிங்கம்
சங்கானை

### நித்திலம் வழங்காயோ

நித்தம் போர் நின்றாடும் மண்ணில்- கத்தி
வரும் எறிகணைகள், சித்திரவதைகள், சா இடுக்கண்
இத்தனையும் தொடர்வதுவோ? காலமகளே நி
திரையோ நீ!
கண்திறவாய்! இத்தரை குளிர அமைதி நித்திலம்
வழங்காயோ? செந்நீர் அருந்தி சந்தனம் கொள்
வாயோ?
எத்தனை நாள் பொறுப்போம் என்ன ளே!
இன்னல் பொடியாக சித்திரையாள் சிரித்தாள்
புத்தாண்டே வருக! போர் தீர வழி தருக.

பவித்திரன்

### புத்தாயிரமாம் ஆண்டின்முதற் புத்தாண்டு

**புத்தாயிரமாம் ஆண்டின் முதற் புத்தாண்டு**

புத்தாயிரமாம் ஆண்டில் புதுயுகத்தில் முதற்
பிறக்கும்புத்தாண்டே நீ வருக
புதுமைகள் பல படைத்து புது உலகம் நாம்
காண்போம் நலமாக நீ வருக
கணனிமயமாகி காண்பதெல்லாம் கனவல்ல நனவென்று நாம் கூற நீ வருக
ஈழத்து தமிழன் தன்னுரிமை எல்லாம் பெற்று
சமத்துவமாக வாழும் நிலைகாண நீ வருக
ஏற்றத் தாழ்வு எல்லாம் நீங்கி எளிமையாக
நாம் வாழ இறைவனை வேண்டி நீ வருக
வலம்புரிச்சங்கெடுத்து வழமாக அதை ஊதி
வருக வருக வென் வரவேற்கின் றோம்

காரைநகர் சி. சிவபாதம்

---

## ஆலய மஹோற்சவம்

[அரியாலை]

ஆனைக்கோட்டை அருள் மிகு ஸ்ரீ உத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை, நாளை மறுதினம் அதற்கடுத்த தினங்களில் முறையே தேர், தீர்த்த சங்காபிஷேக நிகழ்வுகள் இடம் பெறும் 20 ஆம் திகதி பூங்காவனத்திருவிழாவுடன் உற்சவம் நிறைவுறும்.

[உ-106]

★ விடுதலைப் புலிகள் தாமே

# தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை ஒரு போதும் ஏற்க முடியாது!

## வெளிநாட்டமைச்சர் அறிக்கை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் தாங்கள் தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்வதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

இவ்வாறு இலங்கை வெளிநாட்டமைச்சு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமிழ்க் கார்டியனுக்கு வழங்கிய பேட்டி தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது தமிழ் மக்களின் பிரதிநிதிகள தாம் தானென தம்மைதாமே கூறிக்கொள்வது ஒரு போதும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

உள்நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி வாழும் மக்கள் புலிகளை உண்மையாக ஆதரிக்கவில்லை என்பதே உண்மையாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# யாழ்ப்பாணத்தில் பெற்றோலுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெற்றோலுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையங்களில் பெற்றோல் இல்லை என்ற வாசகம் பொறிக்கப்பட்ட அட்டைகள் தொங்கவிடப்பட்டுள்ளன.

அதேவேளை தனியார் எரிபொருள் விற்பனை நிலையங்களில் ஒரு லீற்றர் பெற்றோல் 160 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது இருந்தும் அதுகூட இலகுவில் கிடைப்பது முயல் கொம்பாகவுள்ளது.

நேற்றைய தினம் யாழ். நகரிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்றில் சொற்ப எண்ணிக்கையான பெற்றோல் பரல் மட்டுமே இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. அதுவும் சொற்ப நேரத்தில் விநியோகம் செய்து முடிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது (ச-77)

---

### 700 பேர்...

நிரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

### பாதிக்கப்பட்ட---

மணிக்கு நடைபெறவுள்ளது.

செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் கலைமகள் பாலர் பாடசாலை கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோயிலடி எனும் முகவரிக்கு சமூகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

---

### மேல்மாகாண...

11 மணிக்கு இடம் பெற்ற இத்தாக்குதல் சம்பவத்தின் போது அமைச்சரின் வீட்டில் நின்றிருந்த மூன்று வாகனங்கள் தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக நீர்கொழும்பு பொலீஸார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். [வ]

---

### விமான...

வித்தியாலயத்திற்கு வருகை தருமாறு யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வந்து பயணம் செய்ய முடியாது தாமதமாகியுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வ-ச]

---


உ

முருகன் துணை

## அருள் மிகு நீர்வேலி கந்தசுவாமி கோயில் தேவஸ்தானம்

## இரதோற்சவ விஞ்ஞாபனம்

## 17 - 04 - 2000

காலை 5மணி உதயப் பூசை, தொடர்ந்து விசேட அபிஷேகமும்பூசையும்இடம்பெறும்

காலை 5.45 தம்பபூசை

காலை 6.00மணி வசந்த மண்டப பூசை

காலை 6.15மணி சுவாமி உள்வீதி வலம் வருதல்

காலை 7மணிக்கு தேர் மண்டபம் சேரல்

காலை 7.15மணிக்கு ரதா ரோகணம்

காலை 9மணிக்கு சுவாமி தேரில் வலம் வருதல்

தேவஸ்தான பரிபாலன சபை

(கி- 95)


---

இப்பத்திரிகை ''வலம்புரி)' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு ஏப்ரல்மாதம் 16-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

# ஐ.தே.க மாற்றுக் குழுவினரை விசாரணை செய்ய 5 குழு நியமிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் மாற்றுக்குழு உறுப்பினர்சள் மீதான ஒழுக்காற்று விசாரணை அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மற்றுக் குழுவைச்சேர்ந்த ஐந்து சிரேஷ்ட ஐ.தே,க. பாராளுமன்ற உறுபபினர்கள் ஒல்வொருவராக விசாரணை செய்வதற்கு தனித்தனிக் குழுக்கள் ஐந்து நியமிக்கப்பட்டுள்ளது.

சூலபண்டார, சுசில் முனசிங்கா, சப்பல் பேக்குவரத்து அமைச்சர் நந்தாமத்தியூ. வடபகுதி புனர்வாழ்வு சரத் அமுனுகம, விஜயபால மென்டிஸ் ஆகியோரே தனித்தனியே விசாரணை செய்யப்படவுளளனர். (வ-ச)

---

### சடலம் கரை ஒதுங்கியது

(கொழும்பு)

மட்டக்களப்பு காரைதீவு கடற்கரையில் 45 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரது சடலம் கரை ஒதுங்கி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் மாளிகை காட்டில் வசிக்கும் முஸ்லிம் வியாபாரி என்று பொது மக்களால் அடையாளம் காட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [ச-07]

---

### இடம்பெயர்ந்த,..

இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடி நிவாரணமாகஇரண்டாயிரம் ரூபா வழங்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரியிருந்தது தெரிந்ததே. (வ)

---

### மனிதநேய---

களின் இணைய அலுவலகத்தில் மாலை 5 மணியளவில் நடைபெறும் இக்கூட்டத்தில் 40 க்கு மேற்பட்ட அமைப்புக்கள் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [ச-07]

---

### மரண...

துள்ளார்.

மேற்படி தகவலை திருமலை பிரதேச செயலர் ப. வேலும்மயிலும் தெரிவித்துள்ளார்.

இக்குண்டு வெடிப்பின் போது 9 பேர் கொல்லப்பட்டும், 81 பேர் காயமடைந்ததும் தெரிந்ததே.

வ-சு 60 102

---

### இடம்---

எம்பியுமான இரா. சம்பந்தன் சமூகசேவைகள் அமைச்சர் சுமேதா ஜயசேனாவிற்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த மகஜரில் மேலும் அவர் தெரிவித்திருப்பதாவது பருத்தித்துறை பிரதேச செயலரினால் ஆரம்பத்தில் வழங்கப்பட்டு வந்த உதவிகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை அகதிகள் மேலும் வந்து கொண்டேஇருக்கின்றனர்

இந்த அகதிமக்களுக்கு உதவுவதற்கு யாழ் அரச அதிபருடன் சமூகசேவைப் பணிப்பாளருடனும் பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். [வ]

---


## வாடகைக்கு

தண்ணீர் இறைக்கும் இயந்திரம் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு
சி. பாலச்சந்திரன்
(வெள்ளை)
இல 140/3
4ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(கி-296)


### பல்கலை மாணவர்

# கைதுசெய்யப்பட்டமை குறித்து சர்வதேச மன்னிப்பு சபைக்கு புகார்

(யாழ்ப்பாணம்)

கடந்த 13ம் திகதி யாழ்' குடாநாட்டில் மனித நேய அமைப்புகளாலும் பல்கலை கழக மாணவர்களாலும் இணைந்து நடத்தப்பட்ட ஹர்த்தாலின் போது பல்கலை கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டமை குறித்து சர்வதேச மன்னிப்பு சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாணவர் தாக்கப்பட்டது தொடர்பாக ஐ.நா உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் விவாதிக்கப்பட்டதாகவும் மனிதநேய அமைப் புகள் தெரிவிக்கின்றன. [வ-07]

# நாச்சிக்குடா கடலில் சடலம் கரை ஒதுங்கியது

(யாழ்ப்பாணம்)

மன்னார் பனங்கட்டிக் கோட்டைச் சேர்ந்த கிறிஷ்டிகுறூஸ் (வயது 26) என்பவரின் சடலம் துப்பாக்சிச் சூட்டுக் காயங்களுடன் நாச்சிக்குடாக் கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி கடற்றொழிலுக்குச் சென்ற இவரைக்காணவில்லை என்று உறவினர் மன்னா பொலீஸில் முறையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

---

### இத்தாலிய..,

மல்போன 295 பேரில் இந்தியர்கள் 170 பேரும்,இலங்கையர் 92 பேரும், பாகிஸ்தானியர் 33 பேரும் அடங்குவர்.

காணாமல்போன இந்தியர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக நியமிக்கப்பட்டகுழுத்தலைவர் பார்வட் சிங் கேரா, செயலாளர் பிகோர்சிங் கேராஆகிய இருவரும் கடந்த வாரம் கொழும்பு வந்திருந்த போது கொழும்பு மாவட்ட எம்.பி. ஆர். யோகராஜனைச் சந்தித்து காணாமல் போன இலங்கையர் தொடர்பாக இணைந்துநடவடிக்கை எடுப்பதற்கு சங்கம்ஒன்றை அமைக்கும் படி கேட்டதற்கிணங்கவே இக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இப்படகு விபத்தில் கொல்லப்பட்ட இலங்கையர்களின் நலன்களைக் கவனிக்க நடவடிக்கை எடுக்குமாறு இந்தியக் குழுவின் தலைவர் பார்வட் சிங்கேரா ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இவ் விபத்துப்பற்றி கிங்கேரா தகவல் தெரிவிக்கையில் இவ் விபத்தின் பின் சிலிப் பகுதியில் உள்ள கடற்கரையில் சடலங்கள் கரை ஒதுங்கியதாகவும் சடலங்களில் சப்பாத்து உடுபுடவை இருந்ததாகவும் அவற்றை வீடியோப் படம் பிடித்து வைத்திருப்பதாகவும் இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் பார்வையிடலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்ட 92 இலங்கையர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு தற்காலிகமாக நியமிக்கப்பட்டகுழுவில் அன்ரன் சிவின் பெர்ணாந்து, சவரிமுத்து ஸ்ரனிஸ்லஸ், ஈ.கணேசன், கே.துரைராசசிங்கம், டபிள்யூ.ஏ.மானிச் ரம்மியலதா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

இப்படகு விபத்துத் தொடர்பான விபரங்கள் பெற்றுக் கொள்வதற்கு கொழும்பு மாவட்ட எம்.பி.ஆர். யோகராஜன் இல.23 மாவித்தியாலய மாவத்தைகொழும்பு-13 என்ற முகவரியுடனோ அல்லது 347, 166 என்றதொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்படகு விபத்தில் கொல்லப்பட்டவர்களில் கணிசமானோர் வடக்கு யாழ்ப்பாணத்தையும் கிழக்கையும் சேர்ந்த தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய கூட்டத்தில் கலந்துகொண்ட பெண்கள் கொல்லப்பட்ட தங்களின் பிள்ளைகள் உறவினர்களை எண்ணிக் கண்ணீர் மல்க காட்சியளித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

# எட்டுக் குடும்பங்கள் வந்தன

பளை யுத்தபிரதேச கிராமங்களான மாசார், சோரன்பற்று ஆகிய கிராமங்களில் இருந்து நேற்று எட்டுக் குடும்பங்கள் அழைத்து வரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் மீதமாக உள்ள குடும்பங்கள் இன்று அழைத்து வரப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

---

### தரம் 1...

யுயர்வு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகக்கல்விச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பந்துசேனா தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைகள் இதுவரை காலமும் கொழும்பில் மட்டுமே நடைபெற்று வந்தது தெரிந்ததே.

இதேசமயம், இந் நேர்முகப் பரீட்சையை நடாத்தவென கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் எஸ். தில்லைநடராஜா தலைமையிலான அதிகாரிகள் குழு இங்கு வருகைதரவுள்ளது.

எற்கனவே நடைபெற்ற இலங்கை அதிபர் சேவை தரம் 3 ல் இருந்து தரம் 2 க்குச் செல்வதற்கான நேர்முகப்பரீட்சையில் தோற்ற முடியாதவர்களும் இத் தினங்களில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)